செய்தால், இந்தப் பெரிய பேருந்துகள் திருப்பதி திருமலை வரையில் செல்வதற்கு வாய்ப்பு வசதிகள் ஏற்படும். அந்த வகையில் அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know whether the proposal to introduce a bus route from Thirupathi to Bangalore via Hosur will be expedited?

THE HON. THIRU S. RAMACHANDRAN: As such I have no information; but I think there is such a proposal with the Government.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, இப்பொழுது 6 பஸ்கள் ஓடுகின்றன என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஒரு பஸ்ஸுக்கு சராசரி வருவாய் எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்த விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் இலாபத்திலே ஓடுகிறது.

நகரப் பேருந்துகளில் குறட்பாக்கள்

* 248 வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேருந்துகள் சிலவற்றில் எழுதப்பட்டுள்ள திருக்குறட்பாக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அவைகளைத் திருத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) சில அச்சுப் பிழைகள் துறையின் நாட்டத்திற்குக் கொண்டு வரப் பட்டன. இப்பிழைகள் திருத்தப் பட்டு குறட்பாக்கள் மீண்டும் அச்சிடப்பட்டன.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, வண்ணாரப்பேட்டை பணிமனையைச் சேர்ந்த நகரப்பேருந்து ஒன்றில், "இன்னா செய் தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்ற

1973 மார்ச் 5]

குறட்பாவில், 'நன்னயம்' என்ற சொல்லிற்குப் பதிலாக 'தன்னயம்' என்று எழுதியிருக்கிறார்கள். இது மட்டுமல்லாமல், வேறு சில பேருந்துகளிலேயும் இப்படிப்பட்ட குறட்பாக்கள் பிழைபட எழுதப்பட்டிருப்பதைப் நான் கண்டேன். ஆகவே, நாட்டிலே நம்முடைய அரசுக்குச் சொந்தமான எல்லாப் பேருந்து களிலேயும் இருக்கின்ற குறட்பாக்களைச் சரி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்ற புலவர்கள் இத்தகைய எழுத்துப் பிழைகளைப் பார்க்கும் பொழுது அரசின் கவனத் திற்குக் கொண்டுவருவது மிகுந்த உதவி செய்வதாகும். இந்த வகையிலே ஓரிரு எழுத்துப் பிழைகள் ஆங்காங்கு இருக்கின்றன. அவைகள் கவனத்திற்கு வந்தவுடனே அவைகளெல்லாம் திருத்தி யமைக்கப்படுகின்றன. அதோடு மட்டுமல்லாமல், திருக்குறளை சரி பார்க்கின்ற வகையிலே அவர்களுக்கு உத்தரவும் இடப் பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, திருக் குறளைப் பேருந்துகளில் எழுதியதன் வாயிலாக பள்ளிக் கூடங் களின் பக்கம் திரும்பாதவர்கள் கூட திருக்குறளைப் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல, பயணிகளுக்கு அளிக்கப்படுகின்ற டிக்கெட்டுகளின் பின்புறத்தில் பல்வேறு குறள்களை அச்சிட்டுக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் எதுவும் இப்பொழுது இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அரசுப் பேருந்துகளிலே எழுதப்பட்டிருக்கின்ற இந்தத் திருக்குறளுக்கு மேலாக சுவாமி படங்களைக் கண்ணாடி போட்டு திருப்பதி வெங்கடாசலபதி படங் களைக் கண்ணாடி போட்டு அதன் மேல் மாட்டி, காலையிலே அரசுப் பஸ்களை எடுக்கும்பொழுது பூசை போட்டு எடுக்கிறார்கள். பூசை போட்டு எடுப்பதற்குப் பதிலாக காலையிலே எடுக்கும் பொழுது பஸ்களைச் சுத்தம் செய்து எடுக்க வேண்டுமென்று ஆணை யிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 5

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் திருக்குறள் நல்லமுறையிலே எழுதியிருக்க வேண்டுமென்று, அது பயணிகளுக்கும், அதைப் போலவே ஓட்டுநர்களுக்கும் தெரிகிற வகையில் அமைய வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் அதற்குமேல் தனிப்பட்ட முறையிலே சிலபேர் படங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அது பணியாற்றுகின்ற தொழிலாளர்களிலே இன்னும் சிலபேர் அந்த நம்பிக்கையிலே தங்களை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால் அதுவும் கூடாது என்பதுதான் அரசின் கொள்கை. இந்த இருபதாம் நூற்றாண்டுக் காலத்திலும்கூட இன்னும் சுவாமி படங்களை வைத்துப் பூசைபோட்டுக் கொண்டிருப்பது எந்தவிதத்திலே உகந்தது என்பதை பகுத்தறிவோடு தொழிலாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மே. சி. தூயமணி: தலைவரவர்களே, அரசாங்கப் பேருந்துகளில் ஒருபுறத்தில் திருக்குறள் எழுதப்பட்டிருப்பதைப் போன்று மீதமிருக்கும் மூன்று புறங்களிலேயும் அண்ணாவின் பொன் மொழிகளையும், காந்தியாரின் பொன் மொழிகளையும் பொறிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. அண்ணாவின் பொன்மொழிகளையும், காந்தியடிகளின் பொன் மொழிகளையும் இப்பொழுது பஸ்களிலே பொறிப்பதாக உத்தேசம் இல்லை. ஆனால் உறுப்பினர்கள் அதை பஸ்களிலே பொறிக்க வேண்டுமென்று சொல்வதைவிட, இதயங்களிலே தாங்கிக் கொள்வது மேலானது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், பஸ்களிலே திருக்குறளை எழுதுவதற்கு எவ்வளவு செலவாயிற்று? அதைச் சரிபார்ப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அறிவுப் பணியைச் செய்வதற்கு வரவு-செலவுக் கணக்குப் பார்ப்பது கிடையாது.